THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Wednesday, the 3rd September 1958.

FOURTH SESSION OF THE SECOND LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

The House met in the Assembly Chamber, Fort St. George, at eleven of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

MR. SPEAKER : உங்கள் எல்லோரையும் நான் இந்த சட்டசபை கூட்டத்திற்கு வரவேற்கிறேன்.

I.—CONDOLENCE RESOLUTION ON THE DEATH OF SRI P. P. M. T. PONNUSAMI.

MR. SPEAKER : தூத்துக்குடி தொகுதி சட்டசபை அங்கத்தினராக இருந்த கனம் பி. பி. எம். டி. பொன்னுசாமி அவர்கள் இறந்துபோன செய்தியை வருத்தத்துடன் இந்த சபைக்கு தெரிவிக்கிறேன். இந்த அனுதாப தீர்மானத்தை நீங்கள் எல்லோரும் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

This House places on record its deep sense of sorrow at the demise of Sri P. P. M. T. Ponnusami, a late Member of this House from Tuticorin Constituency, and conveys its deep sense of sympathy to the members of his bereaved family.

அதற்கு சம்மதம் தெரிவிக்கும் முறையில் எல்லோரும் தயவு செய்து இரண்டு நிமிஷங்கள் நிற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் இரண்டு நிமிடங்கள் நின்று, தீர்மானம், ஏகமனதாக நிறைவேறியது.

MR. SPEAKER : இந்தத் தீர்மானத்தை நான் அவருடைய குடும்பத்திற்கு தெரிவிக்கிறேன்.

அவருக்கு மரியாதை செய்யும் பொருட்டு இந்தச் சபையை நான் 11–45 மணி வரைக்கும் ஒத்தி வைக்கிறேன்.

பிறகு சபை ஒத்தி வைக்கப்பட்டது.

The House re-assembled at 11-45 a.m., Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

II.—SWEARING-IN OF A MEMBER.

MR. SPEAKER : தூத்துக்குடி தொகுதியில் தேர்தல் நடந்து புது அங்கத்தினர் தேர்தலில் வெற்றி பெற்று வந்திருக்கிறார். அவர் என் முன்பு வந்து பிரமாணம் எடுத்துக்கொள்ளுவார்.

(புது அங்கத்தினர் கனம் A. சாமுவேல் நாடார் பிரமாணம் எடுத்துக் கொண்டார்.)